TNMD010059712025



**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மதுரை.**

முன்னிலை திரு.S.ஜான் சுந்தர்லால் சுரேஷ் , B.Sc.,M.L.,

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, மதுரை.

**2026ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 30ம் நாள் வியாழக்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.583/2025**

CNR No.TNMD010059712025

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர், ஊமச்சிகுளம் காவல் நிலையத்தில் குற்ற எண்.298/1996–ஆக பதிவு செய்யப்பட்டு, பின்னிட்டு தல்லாகுளம் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. |
| குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் பெயர்கள் | : | 1. மாரியப்பன் A2 (20/1996)<br>த/பெ பிச்சை<br>2. ஜாங்கோ, A7 (22/1996)<br>த/பெ ராஜகோபால் |
| எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச் சாட்டுக்கள் | : | 2 மற்றும் 7 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148 உ/இ 149, 307 உ/இ 149–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 2 மற்றும் 7 எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 148 உ/இ 149, 307 உ/இ 149–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவாக, 2 மற்றும் 7 எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 148 உ/இ 149, 307 உ/இ 149-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>மேலும் 2 மற்றும் 7 எதிரிகள் வழங்கிய பிணை பத்திரங்களை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக இன்று 30.07.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது அரசுதரப்பில், அரசுதரப்பு குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர் திரு.திரு.R.செந்தில் பிரபாகர் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சிலம்பரசன் ஆஜராகியும், 7ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள்வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான தீர்ப்புரை

## <u>வழக்கு சுருக்கம்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | இவ்வழக்கின் 2ம் எதிரி மாரியப்பன் 17.08.1996 முதல் 26.08.1996 வரை = 10 நாட்கள்<br><br>இவ்வழக்கின் 7ம் எதிரி ஜாங்கோ 20.08.1996 முதல் 18.09.1996 வரை = 30 நாட்கள் | | |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 21.02.2000 | | |
| 3. | முதல் நிலை பதிவேட்டு விசாரணை முடிந்து மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | 15.07.2025 | | |
| 4. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 06.07.2026 | | |
| 5. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இல்லை | | |
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **சாட்சிகள்** | **மு.வி.** | **கு.வி.** |
| | | அ.சா.1 | 28.07.2026 | இல்லை |
| | | அ.சா.2 | 28.07.2026 | இல்லை |

TNMD010059712025



| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.3 | 28.07.2026 | 28.07.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 30.07.2026 | | |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை | | |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை | | |

## தீர்ப்புரை

2. அரசு தரப்பு வழக்கானது, கடந்த 15.08.1996ம் தேதி இரவு சுமார் 07.00 மணிக்கு சாட்சி எண்.1 முருகேசன் மற்றும் சாட்சி எண்.2 செல்லமுத்து ஆகியோர்கள் உச்சப்பட்டி பரம்பு மேட்டு வீட்டின் முன்னால் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, எதிரிகள் அந்த வழியாக வந்தனர் என்றும், சாட்சி எண்.2 செல்லமுத்துவின் நாயும், எம்.எல்.ஏ.வீட்டின் நாயும் அவர்களை பார்த்து குரைத்ததால், 1ம் எதிரி அவர் வந்த சைக்கிளை தூக்கி நாய்களை அடித்ததாகவும், இதனால் வாதியும் அவரது அண்ணனும் எதிரிகளை கண்டித்துள்ளனர் என்றும், எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி சாட்சி எண்.2 செல்லமுத்துவை கொலை செய்ய வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தோடு, 1ம் எதிரி சாட்சி

செல்லமுத்துவை இத்தோடு செத்து தொலைந்துபோடா என்று சொல்லி அவரது வயிற்றில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2ம் எதிரி கத்தியால் செல்லமுத்துவின் இடது கையில் குத்தியும், 3ம் எதிரி இவர்களை குத்தி கொல்லுங்கடா என்று சொல்லியும், 1 முதல் 3 எதிரிகளின் செய்கைக்கு, மற்ற எதிரிகள் உறுதுணையாகவும் இருந்த குற்றம் புரிந்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகள் அனைவரும் இ.த.ச.பிரிவுகள் 147, 148, 307 உ/இ 149–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் விளைவித்ததாக ஊமச்சிகுளம் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த வழக்கினை நீதித்துறை நடுவர் எண்.2, மதுரை அவர்கள் முதல் நிலை பதிவேடு வழக்கு எண்.63/2016 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு, இவ்வழக்கின் 2 மற்றும் 7 எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு 207ன் படி வழங்கப்பட வேண்டிய வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர் இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மாண்புமிகு மதுரை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்ததில் அந்த வழக்கு அமர்வு வழக்கு எண்.583/2025 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்டு பின் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

4. 2 மற்றும் 7 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்காவணங்களை ஆராய்ந்து குற்றச்சாட்டு வனைந்து வினவ முதல்நிலை நோக்கு தென்பட்டதால், 06.07.2026 ம் தேதி 2 மற்றும் 7 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148 உ/இ 149, 307 உ/இ 149–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ 2 மற்றும் 7 எதிரிகள் குற்றவாளி இல்லை என்று குற்றத்தை மறுத்ததின் பேரில் அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப் பட்டுள்ளன.

**6. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணைங்களில் இருந்து புலனாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:**

இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.3 நடப்பு காவல் ஆய்வாளர் திரு.அழகுமுத்து தனது சாட்சியத்தில், சாட்சி எண்.11 சார்பு ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணி என்பவர் கடந்த 15.08.1996–ம் தேதியன்று மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று வார்டு எண்.99 சென்று அன்று சிகிச்சையில் இருந்த செல்லமுத்து என்பவரை விசாரிக்க, அவர்

வாக்குமூலம் கொடுக்க முடியாத நிலையில் இருந்ததால் அவரது சகோதரர் சாட்சி எண்.1 முருகேசன் என்பவர் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பெற்று அன்றைய தினம் 22.00 மணிக்கு நிலையம் வந்து ஊமச்சிகுளம் காவல்நிலைய குற்ற எண்.298/1996 இதச 307 பிரிவின் கீழ் என்பவர் வழக்குபதிவு செய்துள்ளார் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்றும், பின்னர் அன்றைய தினம் 23.00 மணிக்கு சம்பவ இடமான உச்சபரம்புமேட்டில் உள்ள வாதியின் வீடு முன்பு சென்று அங்கிருந்த சாட்சிகள் சாட்சி எண்.5 வெங்கடேசன் மற்றும் சாட்சி எண்.6 முருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.4 பார்வை மகசர் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் சாட்சிகள் சாட்சி எண்.1 முருகேசன், சாட்சி எண்.2 செல்லமுத்து, அ.சா.1 இருளாயி அம்மாள், அ.சா.2 பாண்டியம்மாள், சாட்சி எண்.5 வெங்கடேசன் மற்றும் சாட்சி எண்.6 முருகன் மற்றும் சாட்சி எண்.9 அம்மாபிள்ளை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், 17.08.1996ம் தேதியன்று காலை 05.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரிகளான 2வது எதிரி மாரியப்பன், 4வது எதிரி ஆனந்தகுமார் ஆகியோர்களை சாட்சிகள் சாட்சி எண்.7 ராமகிருஷ்ணன் மற்றும் சாட்சி எண்.8 கார்த்திக் ஆகியோர்கள் முன்னிலையில் அய்யர்பங்களா அருகில் உள்ள கண்மாய் கரையில் வைத்து கைது செய்து, அதே சாட்சிகள் முன்னிலையில் 2வது

எதிரி மாரியப்பன் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5 என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்தில் பயன்படுத்தியதாக 2வது எதிரி மாரியப்பன் எடுத்து ஆஜர் செய்த கத்தி ஒன்றை அன்றைய தினம் 06.00 மணிக்கு அ.சா.ஆ.6 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார் என்றும், எதிரிகள் இருவரையும் காவல் அடைப்பு அறிக்கையுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டசொத்தினை அ.சா.ஆ.7 படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றும், கடந்த 17.12.1996–ம் தேதியன்று வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சாட்சி எண்.12 காவல் ஆய்வாளர் திரு.நாராயணசாமி என்பவர் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி எண்.2 செல்லமுத்து என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சாட்சி எண்.10 கமாலுதீன் என்பவர் கொடுத்த அ.சா.ஆ.8 காயச்சான்றிதழை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், புலன்விசாரணை முடித்து புலன் விசாரணை அதிகாரி எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 307, 324 r/w 149 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

7. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 2 மற்றும் 7 எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் படி கேள்வி கேட்க 2 மற்றும் 7 எதிரிகள் பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் 2 மற்றும் 7 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148 உ/இ 149, 307 உ/இ 149–ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டானது அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9 . பிரச்சனை** :

அரசுத்தரப்பு வழக்கானது, கடந்த 15.08.1996ம் தேதி இரவு சுமார் 07.00 மணிக்கு சாட்சி எண்.1 முருகேசன் மற்றும் சாட்சி எண்.2 செல்லமுத்து ஆகியோர்கள் உச்சப்பட்டி பரம்பு மேட்டு வீட்டின் முன்னால் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, எதிரிகள் அந்த வழியாக வந்தனர் என்றும், சாட்சி எண்.2 செல்லமுத்துவின் நாயும், எம்.எல்.ஏ.வீட்டின் நாயும் அவர்களை பார்த்து குரைத்ததால், 1ம் எதிரி அவர் வந்த சைக்கிளை தூக்கி நாய்களை அடித்ததாகவும், இதனால் வாதியும் அவரது அண்ணனும்

எதிரிகளை கண்டித்துள்ளனர் என்றும், எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி சாட்சி எண்.2 செல்லமுத்துவை கொலை செய்ய வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தோடு, 1ம் எதிரி சாட்சி செல்லமுத்துவை இத்தோடு செத்து தொலைந்துபோடா என்று சொல்லி அவரது வயிற்றில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2ம் எதிரி கத்தியால் செல்லமுத்துவின் இடது கையில் குத்தியும், 3ம் எதிரி இவர்களை குத்தி கொல்லுங்கடா என்று சொல்லியும், 1 முதல் 3 எதிரிகளின் செய்கைக்கு, மற்ற எதிரிகள் உறுதுணையாகவும் இருந்த குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதாகும்.

10. அரசு தரப்பு அறிவார்ந்த குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர், இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட சாட்சி எண்.2 செல்லமுத்து என்பவரின் சகோதரர் சாட்சி எண்.1 முருகேசன் 15.08.1996 ம் தேதி 22.00 மணிக்கு கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில், அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, இவ்வழக்கின் 2 மற்றும் 7 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே 2 மற்றும் 7 எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

11. 2 மற்றும் 7 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர்கள் இந்த வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்கு மூலம் கொடுத்ததாக சொல்லப்படும் சாட்சி எண்.1 முருகேசன் மற்றும் இந்த வழக்கு சம்வத்தில் காயம்பட்டதாக சொல்லப்படும் சாட்சி எண்.2 செல்லமுத்து ஆகியோர்கள் வழக்கு நிலுவையின் போது காலமாகிவிட்டதால், அவர்கள் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றும், சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சாட்சியமளிக்கவில்லை என்றும், இந்நிலையில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட காவல் ஆய்வாளர் அழகுமுத்து என்பவர் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி புலன் விசாரணை மேற்கொண்டது குறித்து சாட்சியமளித்திருந்தாலும், 2 மற்றும் 7 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், இந்நிலையில் சந்தேகத்தின் பலனை 2 மற்றும் 7 எதிரிகளுக்கு அளித்து அவர்களை இந்த வழக்கு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

12. இரு தரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது. அரசுத்தரப்பு வழக்கானது எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடி சாட்சி எண்.2 செல்லமுத்துவை கொலை செய்ய வேண்டும் என்ற பொதுவான

நோக்கத்தோடு, 1ம் எதிரி சாட்சி செல்லமுத்துவை இத்தோடு செத்து தொலைந்துபோடா என்று சொல்லி அவரது வயிற்றில் குத்தி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 2ம் எதிரி கத்தியால் செல்லமுத்துவின் இடது கையில் குத்தியும், 3ம் எதிரி இவர்களை குத்தி கொல்லுங்கடா என்று சொல்லியும், மற்ற எதிரிகள் 1 முதல் 3 எதிரிகளின் செய்கைக்கு உறுதுணையாகவும் இருந்த குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதாகும். இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லப்படும் சாட்சி எண்.2 செல்லமுத்து மற்றும் வழக்கு சம்பவம் குறித்து குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் சாட்சி எண்.1 முருகேசன் ஆகியோர்கள் வழக்கு நிலுவையின் போது காலமாகிவிட்டதால், அவர்கள் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. மேலும் இந்த வழக்கில் வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சி எண்.2 செல்லமுத்துவின் மனைவியான அ.சா.1 இருளாயி அம்மாள் மற்றும் சாட்சி எண்.1 முருகேசனின் மனைவியான அ.சா.2 பாண்டியம்மாள் ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக சாட்சியமளிக்கவில்லை. இந்நிலையில் இந்த வழக்கில் நடப்பு காவல் ஆய்வாளர் அ.சா.3 திரு.அழகுமுத்து என்பவர், இந்த வழக்கினை சாட்சி எண்.11 சார்பு ஆய்வாளர் பால சுப்பிரமணியன் மற்றும் சாட்சி எண்.12 ஆய்வாளர் நாராயணசாமி ஆகியோர்கள் புலன்விசாரணை மேற்கொண்டது சம்பந்தமாக சாட்சியமளித்திருந்தாலும், 2 மற்றும் 7 எதிரிகள் மீதான குற்றச்

சாட்டுக்களானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை 2 மற்றும் 7 எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இந்த வழக்கு சம்பவம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, 2 மற்றும் 7 எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 147, 148 உ/இ 149, 307 உ/இ 149-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் 2 மற்றும் 7 எதிரிகள் வழங்கிய பிணை பத்திரங்களை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 30ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.30 18:37:13 +0530

1வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

TNMD010059712025



**அரசு தரப்பு சாட்சிகள்** :–

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. இருளாயி அம்மாள் |
| அ.சா.2 | திருமதி.பாண்டியம்மாள் |
| அ.சா.3 | திரு.அழகுமுத்து, நடப்பு காவல் ஆய்வாளர், தல்லாகுளம் காவல் நிலையம் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 15.08.1996 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 15.08.1996 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 15.08.1996 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4 | 15.08.1996 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 17.08.1996 | 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.6 | 17.08.1996 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.7 | 15.08.1996<br>17.08.1996 | படிவம் 91 (2 எண்ணம்) |
| அ.சா.ஆ.8 | 15.08.1996 | விபத்துப்பதிவேடு |

**அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்** :– இல்லை

**2 மற்றும் 7 எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** : இல்லை

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.30 18:37:20 +0530

1வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை